# விடியல்
## The Dawn


இதழ்-71, மார்ச்-2015
தனிச்சுற்றுக்கு மட்டும்



கௌரவ ஆசிரியர்
முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு
முனைவர்.பெ.கணேசமுருகன்
துறைத்தலைவர்

ஆசிரியர் குழு
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு
முனைவர்சி.ஆர்.சுரேஷ் முனைவர் த.சுந்தரராஜ்
திரு. செ.தங்கராஜ் திரு. மு. சதீஸ்குமார்



வெளியீடு:
**தமிழ்த்துறை**
KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power
கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.



**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## தலையங்கம்

ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் தேதி உலக மகளிர் தினம் (International Women's Day) உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை நாளாகும்.

சர்வதேச மகளிர் தினம் இன்று உலகமெங்கும் கொண்டாடப் படுகிறது. ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிட வேண்டும். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்து வதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். வீட்டு வேலைகளை செய்வதற்காக பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்ப கல்வி கூட தரப்படாமல் மறுக்கப்பட்டது.

1857ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில்

பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது. ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இதனால் பெண்கள் மிகுந்த வருத்தமடைந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக்கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு இதற்கு செவி கொடுக்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் பெண் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர், 1857ம் ஆண்டு மார்ச் 8ம் தேதி இதற்கான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர். அதன் பிறகு 1907ம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910ம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு அவர்கள் காட்டினர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜெர்மனி கம்யூனிஸ்ட் தலைவர் கிளாரே செர்கினே, மார்ச் 8ம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

1920ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

இதையடுத்து 1921ம் ஆண்டு முதல் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975ம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது.

இந்த மகளிர் தின நன்னாளில் பெண்களுக்குஎதிரான வன்முறை யையும், பெண்களைத் தாழ்வாகக் கருதும் பழமைவாதத்தையும் அடியோடு ஒழிப்போம் என நாம் அனைவரும் உறுதி கொள்வோம்.

# உள்ளடக்கம்


**கவிதை**........................5-16

- விண்மீன்கள்
- தாயே நீ அற்புதம்
- மழை
- ஆரம்பம்
- நட்பு
- உலகம் உன் கையில்
- வாழ்க்கைக்கு உதவும் கவிதை
- மாற்றம்-ஏமாற்றம்
- நட்பு
- கல்லூரி
- உண்மையான நண்பன்
- பிரிவு
- பாசம்
- வாழ்க்கையின் தத்துவம்
- கைக்குட்டை
- மௌனம்
- மழை
- கல்லறையின் கண்ணீர்
- பள்ளிக்கூடம்
- நாவல்
- அது நட்பல்ல
- புத்தகம்
- முதல் சந்திப்பு
- அம்மா
- பெண் சிசுக்கொலை
- எல்லாம் நமக்கே
- அன்பு
- கடல்
- தாய்
- தானம் செய்வீர்
- நட்பே மன்னித்துவிடு
- வெற்றி வழிகள்
- தாலாட்டு
- தாய்
- குழந்தை
- நண்பா எப்படி?
- ஆசிரியர்
- தமிழே என் மொழி
- தாய்பாசம்
- மீண்டும் சந்திப்போம்
- நட்பு
- கல்லூரி
- நினைவுகள்
- அன்பு
- ஊனமுற்றோர்
- என் தாய்
- நண்பன்
- தூய்மை இந்தியா

**சிறுகதை**...................17

❄ கல்விச்செலவம்

**பொது அறிவு**.........18-28

✷ International Day
of the March
✷ சின்னச்சின்ன கேள்விகள்
✷ பொது அறிவு
✷ விடுகதைகள்
✷ மருத்துவக் குறிப்பு
✷ நாட்டுப்புற மருத்துவம்
✷ விடுகதை
✷ பொன்மொழி
✷ விடுகதைகள்
✷ தத்துவக் கணக்கு
✷ யானை —வேறுபெயர்கள்
✷ அறிவியல் பெயர்கள்
✷ பொன்மொழிகள்
✷ என் தமிழ் என்னைக்
குத்திக்காட்டியது
✷ பொது அறிவு
✷ உலகின் பண்டைய வரலாறு
✷ ஊர்பெயர்களும் விளக்கமும்
✷ நகைச்சுவை

**ஓவியம்**..................27-29

# கவிதைகள்

## விண்மீன்கள்

சின்ன சின்ன விண்மீனம்மா
சித்திரம்போல் சிரிக்குதம்மா
விண்ணில் வந்த சொர்க்கமம்மா
இடம் தவழும் அமுதமம்மா
பரந்து விரிந்து இருமடங்காய்
வானில் நீயே இருக்கின்றாய்
பவளம் முத்தினையும் கொண்ட
எம்மனம் ஏனோ பறிக்கின்றாய்!!

**இரா.நதியா**
உயிர்த்தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு

## தாயே நீ அற்புதம்

தூக்கம் கலையாமல்
தந்த முத்தம்!
கைகால் அசைத்த போது
வயிற்றைத் தடவிய
பாசம் நான்!
எதற்கோ அழ பால்
தந்த நேசம்!
பனித்துளி மழைத்துளியை – விட
அற்புதமானது
தாய்ப்பாசம்!!!

**செ.கயல்விழி**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## மழை

மழையின் வாசம்
மண்ணின் சுவாசம்
மழையின் ஓர் துளி
மண்ணின் உயிர்த்துளி
வானத்தில் திருவிழா
வாழ்த்தும் நம் உள்ளங்கள்
மேகக்கூட்டங்களின் ஆரவாரம்
மண்ணில் உயிர்களின் ஆதாரம்!!

**ஜெ.ஸ்வாதி**
கணினிஅறிவியல் முதலாமாண்டு ‘இ’ பிரிவு

## ஆரம்பம்

ஒரு புள்ளியை கடைசியில்
வைத்தால் அது முடிவு! – அதனால்
அந்தப் புள்ளியோடு இன்னும்
சில புள்ளிகள் வைத்தால்
அந்த முடிவும்
ஆரம்பமாக மாறும்...

**ர.ஜெஸ்னா**
பி.பி.ஏ முதலாமாண்டு ‘ஆ’ பிரிவு

## நட்பு

முள்ளில் தான் வாழ்க்கை
என்றாலும்
சிரித்துக் கொண்டே வாழ்கிறது
ரோஜா – ஆனால்

நட்பு என்பது ஓடையை
போல் அல்ல – அது
ஒரு கடல் - என்றும்
நிலைத்திருக்கும்!!!

**ஆ.நவனீதகிருஸ்ணன்**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## உலகம் உன் கையில்

நிமிர்ந்து நின்றால்
வானம் உனக்கு குடை
எழுந்து நடை போட்டால்
முட்கள் உனக்கு படிக்கட்டு
புயலாய்ப் புறப்பட்டால்
மலைகள் கூட உனக்கு மாலைகள்
உறுதி கொண்டால் - அதை
நீ உணர்ந்து கொண்டால்
உலகம் உன் கையில்!!!

**சே.பிரியங்கா**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## வாழ்க்கைக்கு உதவும் கவிதை

ஆயிரம் அடி தோண்டியும்
கிடைக்காத தண்ணீர்
ஒரு அடி நீ என்னை விட்டு
விழகியதும் வருகிறது
என் கண்ணில்!!!

**ரா.கீர்த்தனா**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## மாற்றம் - ஏமாற்றம்

நாமக்கல் சந்தையில்
நேற்று மூன்றுமுப்பது
நேற்று முன்தினம் மூன்றைம்பது
இன்று மூன்றுபத்து
நாளையும்
எங்கள் உள்ளூர்பெட்டிக்கடையில்
நான்கு ரூபாய் தான்
ஒரு முட்டை.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.

## நட்பு

பூக்கள் பூக்கட்டும் - உன்
புன்னகை பார்த்து
கவிதை பிறக்கட்டும் - உன்
குறல் கேட்டு
சூரியனும் வழிகாட்டும் - உன்
முகம் பார்த்து
நம் நட்பு தொடரட்டும்
நம்மைப் பார்த்து!!

**மு.சாந்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## கல்லூரி

கோவிலை போன்றது கல்லூரி –
அங்கே
வாழும் தெய்வங்களாக
ஆசிரியர்கள்!
பக்தர்களின் மனதிலோ தூய்மை –
அதுபோல
மாணவர்களின் மனதிலோ
வெண்மை!
கோவிலுக்கு சிறப்பு கோபுரங்கள் -
இங்கே
கல்லூரிக்கு சிறப்பு மாணவர்கள்!
ஆன்மீகத்தை வளர்ப்பது கோவில்
அறிவை வளர்ப்பது கல்லூரி!
கல்லூரிக்காலம் ஒரு பொற்காலம்
கல்லூரியை நேசிப்போம்!
அறிவை வளர்ப்போம்!!

**எம்.சுகன்யா**

உயிர்தொழில்நுட்பவியல் முதலாமாண்டு

## உண்மையான நண்பன்

உன் உயிரில்
உன் உறவில்
உன் மூச்சில்
உன் நினைவில்
உன் அன்பில் யார் யாரோ
இருக்கலாம் - ஆனால்
யாரும் இல்லாத போது
உனக்காக இருப்பேன்
உண்மையான நண்பனாக!!"
"உதடுகள் சிரிப்பது
ஊருக்குத் தெரியும் - ஆனால்
உள்ளம் அழுவது
யாருக்குத் தெரியும்
நண்பர்களைத் தவிர!!"

**ரா.கீர்த்தனா**

பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## பிரிவு

பிறப்பு என்னும்
நான்கு எழுத்தில் பிறந்து
அம்மா என்னும் அன்பில் வளர்ந்து
அப்பா என்னும் அறவனைப்பில்
பாதுகாத்து
பள்ளி என்னும் மூன்று எழுத்தில்
அறிமுகமாகி
நட்பு என்னும் நந்தவனத்தில் பூத்து
பிரிவு என்னும் மூன்றெழுத்தில்
பிரிகிறோம்
கல்லறை பெட்டிக்குள்...

**த.மேனகா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பாசம்

தினம் தினம் அப்பாவின்
வார்த்தைகளை விட

திட்டாமல் நகரும்
நண்பனின் மௌனமே
அருமையானது!!

**ஜெ.முஞ்சுளாதேவி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## வாழ்க்கையின் தத்துவம்

பெற்றோருக்கு செய்ய வேண்டிய
கடமையை
நினைத்துப் பார்த்தால்
கனவில் கூட
வராது காதல்!!

**கு.தமிழ்**
ஆடைவடிவமைப்புத் துறை முதலாமாண்டு

## கைக்குட்டை

என் நாணங்கள்
என் கண்ணீர் துளிகளை
முதலில் பங்கு போட்டுக்
கொண்டவன்...
என்னவன் முத்திரை
பதிக்க என்னும் இடங்களில்
எல்லாம் - அவனுக்கு
முதலில் முத்திரையை
பதித்தவன்..
என் முதல் காதலன்
என் கைக்குட்டை...!!

**தி.சுப்புலட்சுமி**
ஆடைவடிவமைப்புத் துறை முதலாமாண்டு

## மௌனம்

இன்பமான நேரங்களில்
மௌனம் சம்மதம்
உண்மையானவர் பிரியும் போது
மௌனம் துன்பம்
நாட்டில் மௌனம் சித்ரவதை
காதலில் மௌனம் அடக்கம்
இறுதியில் மௌனம்
மரணம்!!

**நா.அருணா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மழை

தோழனாய் நினைத்து
தொட்டுக் கொள்ள
அனுமதி அளித்தேன்...
முழுவதுமாய் என்னை
உனக்கு அடிமையாக்கி
கொண்டவன் நீ...
வியர்வை துளிப் போல
உன் சாரல் ஜில்லென
என் மீது படும் வேளைகளில்
நானே முட்டாளாய்
உனக்கு அடிமையாகி விட்டேன்..
புயலாய் வந்து
என்னையே புரட்டி விட்டாய்
என் நிறமற்ற காதலா..!!

**தி.சுப்புலட்சுமி**
ஆடைவடிவமைப்புத் துறை முதலாமாண்டு

## கல்லறையின் கண்ணீர்

கருவறையில் அழுது
கொண்டே பிறந்தவன்
பூமி தாயின் கருவறையில்
சிரிக்கிறான்!
அழுகிறான்!
என்னிடத்தில் வருகையில்
மௌனம் கொள்கிறான்
நான் என்ன அவ்வளவு
கொடுமைக்காரனா?

**கே.ஆர்.மகேஸ்வரி**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பள்ளிக்கூடம்

நான் வாழ்க்கையில் எவ்வளவு
உயரத்துக்கு சென்றாலும் -
என்றுமே
நான் ஒரு மாணவிதான்
எனது பள்ளியில்...
விழி மூடி வலி தெரியாமல்
இருந்த என்னை
கல்வி எனும் பாதையில்
கைபிடித்து சென்றது
அந்த கல்வியை கலங்கமில்லாமல்
எனக்கு கற்று தந்தது - எனது
பள்ளிக்கூடம்!!!

**ஆர்.தாரணி**
கணினிஅறிவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு

## நாவல்

நமது நாட்டின் எல்லையில்
நடக்கின்றன மோதல்!
அறியாமல் சிலர்
செய்கிறார்கள் ஊழல்!
மோதலையும் ஊழலையும்
அழிக்க வேண்டும் என்பது
நமது மாணவர்களின் ஆவல்!
இத்தகைய மாணவர்களின்
ஆவலுக்கு உதவி புரிவதுதான்
நமது நாவல்!!!

**கார்த்திக்** *I BSC (MB )*

## அது நட்பல்ல

உன்னை நானும்
என்னை நீயும்
புகழ்ந்து பேசின்
அது நட்பல்ல!
எம்மைப்போல்
நட்பு யாரும் இல்லை
நட்புக்கு நாமே சின்னம்!
வகையான வார்த்தைகள்
உண்மை நட்பல்ல
நட்பு என்றும் அலங்கார
வார்த்தையல்ல...!!

**கோ.மோனிஸ்குமார்**
கணினிஅறிவியல் இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## புத்தகம்

திறக்கும்முன் ஆர்வத்தைத்
தூண்டி முடித்தபின்
பயன் நல்குவதே
நல்ல புத்தகம்!
அழிவடையாமல்
பாதுகாக்கப்பட்ட எண்ணங்களே
புத்தகங்கள்!
மனிதனின் சிறந்த கண்டுபிடிப்பு
புத்தகம் தான்!!

**எஸ்.சுரேஸ்**
வணிகவியல் முதலாமாண்டு

## முதல் சந்திப்பு

முதல் நாள் சந்தித்ததை நீ
மறந்துவிட மாட்டாய்
நீயும் நானும் பழகியதை
மறந்துவிடுவாயோ சொல்
மீண்டும் மீண்டும் சந்திக்கலாம்
முதல் நாள் சந்தித்ததைப் போல்..!!

**வி.நந்தினி**
ஆடை வடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## அம்மா

என்னைக் கருவறையிலும்
சுமக்கிறாய்!
கல்லறையிலும் சுமக்கிறாய்!
இதயத்திலும் சுமக்கிறாய்!
இமையிலும் சுமக்கிறாய்!
துன்பத்திலும் சுமக்கிறாய்!
துயரத்திலும் சுமக்கிறாய்!
மனதிலும் சுமக்கிறாய்!
மனமகிழ்ச்சியிலும் சுமக்கிறாய்!
நிம்மதியிலும் சுமக்கிறாய்!
நித்தமும் சுமக்கிறாய்!
இத்தனையும் சுமந்த உன்னை –
நான்
இன்றும் அன்றும் என்றும் சுமக்க
ஆசைப்படுகிறேன் தாயே! - இந்த
ஆசையை ஏற்று அன்னை
அரவணைப்பாயா!!!

**எம். ஸ்ரீயாழினி**
II BSC MB

## பெண்சிசுக்கொலை

நீ மகளாகவும் தாயாகவும்
மண்ணில் பிறந்து அனைவரையும்
மகிழ்ச்சியாக வாழ வைக்கிறாய்!
நீ எந்த ஒரு மகிழ்ச்சியையும்
அனுபவிக்காமல்
வாழ் நாள் முழுவதும்
துன்பத்தையே அனுபவிக்கிறாய்!
நீ இந்த உலகில் பிறந்து
அற்புதங்களையும் படைக்கின்றாய்!
உன் பொறுமையை அறியாதவர்கள்
பெண் குழந்தை என்றாலே
வேரோடு அழிக்க ஏன்
நினைக்கிறார்கள்..?

**எஸ்.மேகலா** - II BSC MB

## எல்லாம் நமக்கே...

பூக்கள் பூப்பதும் நமக்காக! –
மென்மை புன்னகையை
பூப்பதும் நமக்காக!
காட்டை அளிப்பதும் நமக்காக! –
தூய்மை காற்றை அளிப்பதும்
நமக்காக!
மழையை கொடுப்பதும் நமக்காக! –
சில மண்வாசனையை கொடுப்பதும்
நமக்காக!
வண்ணம் தருவதும் நமக்காக! –
பல வனவிலங்குகளை தருவதும்
நமக்காக!
சமுதாயம் படைப்பதும் நமக்காக! –
நல்சரித்திரம் படைப்பதும் நமக்காக!
இத்தனையும் அளித்த இயற்கையை
இறுதியில் அழிப்பது எதற்காக!!!

**ஆர்.ஷீலா**
II BSC MB

## அன்பு

அன்பாய் சொல்ல
ஆயிரம் பேர் இருந்தாலும் - அதன்
அன்பை காட்ட
அம்மாவைத் தவிர வேறு
யாரும் கிடையாது!

**மா.நந்தக்குமார்**
பி.சி.ஏ முதலாமாண்டு

## கடல்

முத்தும் பவளமும் உந்தனில்
விளையும் சொத்து
மீன் நண்டு உயிர்கள் பல
வாழும் பெருநீர்ப்பரப்பு
பரவர் குலத்திற்கு நீயே
உயிர்மூச்சு
ஆழிப் பேரலையால் நீயாள்
விழுங்கு அதிசயத்தை
ஆரம்பித்து விடாதே இனி!
ஆன்றோர் தேசத்தை
மாண்டோர் தேசமாக என்றும்
ஆக்க வேண்டாம்!!

**பா.ஹரிப்பிரியா**
கணிதவியல்துறை முதலாமாண்டு

## தாய்

மறுஜென்மம் ஒன்று இருந்தால்
நான் செருப்பாக பிறக்க
ஆசைப்படுகிறேன்
என்னை சுமந்த தாயை
நான் சுமக்க...
பத்து மாதம் சுமந்து என்னை
பஞ்சு மெத்தையாக
பெற்றெடுத்தாயே!
உன் குருதியை உணவாக்கி
என்னை பெற்றெடுத்த தாயே!
இருட்டறையிலும் ஒளியாக்கி

என்னை பெற்ற தாயே!
உன் இன்பத்தை தொலைத்து
துன்பத்தை மட்டும் ஏற்று
எனக்கு சந்தோஷம் கொடுத்த
தாயே!!

**எம்.புவனேஸ்வரி**

II BSC MB

## தானம் செய்வீர்!

ஓர் உடல் இருக்க
சில உயிர் வாழ
இரத்த தானம்!
மறுபிறவி நிஜமாம்
மறுபடியும் உலகைக் காண
கண் தானம்!!

**எஸ்.அகிலா**

கணிதவியல்துறை முதலாமாண்டு

## நட்பே மன்னித்துவிடு

நண்பனே உன் நட்பை உணர
காலம் தாழ்த்திவிட்டேன்.
தோள் கொடுப்பான் தோழன்
என்பதை உன் தோளில் என்னை
கல்லறைக்கு சுமந்து செல்கையிலே
உணர்ந்து கொண்டேன்
என் அன்னையை உன்
அன்னையாய்
கண்ட உன்னை மறந்தேனே..!
இன்று உன் மூச்சு நின்றப்பின்னே
உன் நட்பின் சுவாசத்தை
உணர்ந்து கொண்டேன்..

**கோ.மோனிஸ்குமார்**

கணினி அறிவியல் இரண்டாமாண்டு'ஆ'பிரிவு

## வெற்றி வழிகள்

தோல்வி
உன்னை துரத்துகிறது என்றால்
நீ வெற்றியின் வாசலை
தேடி வந்து விட்டாய்
என்று அர்த்தம்!
வெற்றியின்வாசலை தேடிவந்தவர்கள்
நிச்சயமாக ஆயிரம் தோல்விகளிடம்
வழி கேட்டுதான் வந்திருப்பார்கள்!
முதல் முறையில் ஜெயித்தவன்
அதிஷ்டசாலி
இரண்டாம் முறையில் ஜெயித்தவன்
தைரியசாலி
மூன்றாம் முறையில் ஜெயித்தவன்
அனுபவசாலி
நான்கான் முறையில் ஜெயித்தவன்
துணிச்சல்சாலி
வெற்றியை
தேடிக்கொண்டே இருப்பவன் தான்
சாதனையாளன்!!

**பா.சபிதா**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## தாலாட்டு

பூக்களின் மீது
இரத்தங்கள்!
பூமியின் மீது
சடலங்கள்!
காஸ்மீர் மீது
வன்முறை யுத்தங்கள்!
சாய்ப்பவனும்
சாய்பவனும்
எங்கள் சொந்தங்கள்!!!

**செ.கயல்விழி**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## தாய்

கருவறையை விட்டு கீழே இறங்கி
கல்லரைக்கு செல்லும் தூரம்தான்
வாழ்க்கை!
என் வழ்வை சிற்பியாய்
வடிவமைத்தவள் நீ!
கருவறையிலும்
ஒளி தந்தவள் நீ!
கண்ணீருக்கு நீரானவள் நீ!
காயங்களுக்கு மருந்தானவள் நீ!
தாகத்திற்கு நீரானவள் நீ!
பசிக்கு உணவானவள் நீ!
வேர்வைக்கு காற்றானவள் நீ!
வாய்மொழிக்கு வார்த்தையானவள்
நீ!
உடலுக்கு உடையானவள் நீ!
உணர்வுகளுக்கு உயிர்கொடுத்தவள்
நீ!
உயிருக்கு மூச்சானவள் நீ!
இவற்றை எல்லாம் கொடுத்த நீ
ஏன் என்னை விட்டு விரைவில்
பிரிய துடிக்கிறாய்!!!

**எம்.மொனிகா**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## குழந்தை

மழலையின் சிரிப்பு
மனசுக்குள் மத்தாப்பு
குழந்தையின் குதூகலம்
கொண்டாடுவோம் தினம் தினம்
கள்ளமில்லா வெள்ளை உள்ளம்
கவர்ந்திடும் நம்மை எல்லாம்
குழல் யாழ் ஒலிகளை விட
மழலையின் சொல் இனிது!!

**ஜெ.ஸ்வாதி**
கணினிஅறிவியல் முதலாமாண்டு'இ'பிரிவு

## நண்பா எப்படி?

நண்பா!
பாதைகள் பல இருக்க
படுத்து உறங்கினால் எப்படி?
விண்ணை நோக்கும் சிறகினை
மண்ணில் புதைத்தால் எப்படி?

எப்படி என்னும் கேள்விக்குறியை
உழைத்து உயர்ந்து அகிலமே
வியந்து பார்க்கும்
ஆச்சரியக்குறியாக்கு!!!!

**வே.திருமாலன்**

பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## ஆசிரியர்

கடலைவிட்டு அலை பிரிவதில்லை
வானத்தை விட்டு நிலவு
பிரிவதில்லை
பூவை விட்டு வாசம் பிரிவதில்லை
தேனை விட்டு சுவை பிரிவதில்லை
நட்சத்திரத்தை விட்டு ஒளி
பிரிவதில்லை
இவைகளைப் போன்று ஆசிரியரே
நீங்கள் கற்றுத்தந்த
கல்வியும் அறிவுரைகளும்
எங்கள் மனதை விட்டு
என்றும் பிரிவதில்லை!!

**ச.மௌனிகா**

பி.சி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## தமிழே என் மொழி

ஆல் போல் விரிந்த தமிழ்
மலையாக வளர்ந்த தமிழ்
பூவாக மணந்த தமிழ்
தேனாக இனித்த தமிழ்
திலகமாய் பொதிந்த தமிழ்
வானாக உயர்ந்த தமிழ்
தூனாக நின்ற தமிழ்
எண்திக்கும் பரந்த தமிழ்
தாயாக இருந்த தமிழ் - அதுவே
எனது செந்தமிழ்!!

**வி.கௌரிசங்கர்**

இயற்பியல் துறை இரண்டாமாண்டு

## தாய் பாசம்

அம்மா நீயும் நானும்
பத்து மாதம் - ஓர்
உயிராய் இருந்தோம்!
பிரசவ வழியின் போது மருத்துவர்
நம் தொப்புல் கொடியை
வெட்டினார் – அது
நம் உறவை முறிப்பதர்க்காக
அல்ல!
நம் பாசத்திற்க்காக
வெட்டப்பட்ட ரிப்பன்!!!

**எஸ்.திவ்யா**

ஆடைவடிவமைப்புத் துறை முதலாமாண்டு

## மீண்டும் சந்திப்போம்

பிரிவை எந்த அளவுக்கு
வெறுக்கிறோம் என்பதை
பிரிந்திருக்கும் போது அல்ல!
மீண்டும் சந்திக்கும் போதுதான்
உணரமுடியும்!!

**ஜெ.மஞ்சுளாதேவி**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

நீண்ட நாட்கள்
பழகியிருந்தாலும் கூட
பல உறவுகளுடன்
மனதார நெருங்க
முடிவதில்லை ஆனால்
சில நாட்கள் மட்டும்
பழகியிருந்தாலும்
ஒரு சில உறவுகளிடம்
தம்மை அறியாமலே
மனதில் உள்ள உணர்வுகளை
வெளிப்படுத்தி விடுகிறோம்!!

**கு.கோகுலக்கண்ணன்**
கணினி அறிவியல் முதலாமாண்டு

## கல்லூரி

அழகான கல்லூரி
அண்பான நண்பர்கள்
இனிமையான பேச்சு
இதமான நட்பு
உண்மையான உணர்வு
உறவினரும்
கொடுக்க முடியாத பாசம்
எதார்த்தமான வார்த்தைகள்
சிரித்து பேசும் நண்பர்கள்
யாருக்கும் கிடைக்காத உறவு
ஏற்றுக்கொள்ள முடியா பிரிவு
கல்லூரி வாழ்க்கை!!

**மு.சாந்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நினைவுகள்

கோலமிட்ட விழிகளும்
ஈரமிட்ட இதழ்களும்
மகிழ்ச்சி கசிந்த
நாட்களும் - நம்
கையசைத்துப்
பிரிந்த வேளையும்
கல்லூரி வாழ்க்கையின்
கல்வெட்டாய் அல்ல!
வாழ்க்கையில் காயங்களாய்
காதலி!!!

**செ.கயல்விழி**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## அன்பு

அன்பானவர்கள்
உன்னை
புரிந்து கொள்ளவில்லை
என்று சொல்லி
அவர்களை நீ
புரிந்து கொள்ளாமல்
பிரிந்து விடாதே!!

**கு.தமிழ்**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## ஊனமுற்றோர்

ஊனம் என்றுசொன்னார்கள்
உலகெங்கும்
பாவம் என்றும் கூறினார்கள்
பாரெங்கும்
பரிதாபம் கொண்டனர்மக்கள்
மனதெங்கும்
உதவிசெய்யவந்தார்கள்
யாரும் இல்லை
கண்கள் வெளிச்சமின்றிதீக்குச்சி
செய்தோம்
பேசவார்த்தைகள் இன்றி
புல்லாங்குழல் வாசித்தோம்
செவி இருந்தும் கேட்கமுடியாமல்
சிறுதொழில் புரிந்தோம்
சிலர்கல்விகற்றுவெற்றி
பெறமுயன்றோம்..
நாங்களும் சாதனைசெய்து
வெற்றிகொண்ட
அத்திருநாளே எங்களின் வாழ்வின்
பிறந்த நாளான மார்ச்15...

**பி.சௌமியா**

## என் தாய்

உன் பெயரை
உச்சரித்தவுடன்
உணர்ந்துக் கொண்டேன்
என் வாழ்க்கையை! — என்
வாழ்க்கைப் பரிமாணத்திற்கு
முதன் முதலாக விதையை
ஊன்றியவள்!
நான் தோல்வியைக் காணும்
போதெல்லாம்
என்னோடு இருந்து
வெற்றிப் படியைக்
காட்டியவள்!
நான் நிஜத்தில்
காணும் தெய்வம்
என் தாய்!!

**செ.சத்யநாராயணன்**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## நண்பன்

நான் பிரிந்த பின் -என்
கல்லறைக்கு மட்டும்
வந்து விடாதே! அங்கே
உன் கால்கள் வலிக்காமல்
இருக்க பூக்கள் இருக்கும்
உன் கண்ணீரை துடைக்க!
என் கைகள் இருக்காதே!!

**க.ஜீவஜோதி**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு.

## தூய்மை இந்தியா

தூய்மை வேண்டும்
என்று கூறும் அரசியல்
தூர்வாறி எறிகிறது குப்பைகளை
மக்களின் மீதே....

**மு.பொற்கொடி,** இரண்டாமாண்டு
உயிரிதொழில்நுட்பவியல்-ஆ பிரிவு

# சிறுகதை

## கல்விச்செல்வம்

மாலாவும் அவளது பெற்றோரும் ஏரிக்கு அருகில் உள்ள குப்பத்தில் வந்து நின்றுகொண்டிருந்தனர் அதைப் பார்த்த மாலாவின் தோழி கமலா, மாலா எப்படி இருக்க இங்க என்ன செய்யிற எனக் கேட்டு விசாரித்துக் கொண்டு இருந்தாள். மாலா கமலாவிடம் எந்த ஒரு வினாவிற்கும் பதில் கூறாமல் நின்று கொண்டிருந்தவேளையில் மாலாவின் தந்தையார் கமலா நீ இங்கதான் இருக்கிறாயா எனக் கேட்டார். கமலா நான் இங்க தான் இருக்கிறேன் எனக் கூறினாள். மாலாவின் தோற்றத்தைப் பார்த்த கமலா மாலாவின் ஏழ்மையினை உணர்ந்து அவளையும் அவளது பெற்றோரையும்அழைத்துச் சென்றாள். கமலாவின் வீடு பெரிய அளவில் இல்லையென்றாலும் ஒரு சன்னல் அதன் அருகே ஒரு திண்ணையும் வைத்த குடிசை வீடுதான். அதன் பின்னர் கமலா மாலாவிடம் ஏழ்மையின் காரணத்தை கேட்கத் துவங்கினாள். ஏனென்றால் மாலா இப்படியான ஏழ்மை குலத்தை சார்ந்தவள் அல்ல அவளின் தந்தையார் ஒரு செல்வந்தர். மாலா பிறகும் பதில் கூறவில்லை. அவள் பிரம்மை பிடித்தவள்போல் இருந்த வேளையில் அவளின் உள் மனத்துக்குள் ஒரு ஆவேசமான ஏதோ ஒன்று அவளை கேள்வி கேட்டது. அதுதான் அவளது தலைக்கணமும் ஆவணமும் அப்பொழுது கமலாவும் மாலாவும் ஒரே பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள் அந்த நிலையில் கமலாவின் ஏழ்மையை மாலா கிண்டலும் கேலியும் அடித்து தன்னை மட்டும் பெருமை அடித்துக்கொள்ளுவாள். கமலாவோ அதனை பெரிதாக எடுக்காமல் மாலாவை தனது தோழியாகவே பார்த்தாள். மாலா படிப்பில் முதலிடம் ஒன்றும் இல்லை. தன்னிடம் நிறைவற்ற செல்வம் இருக்கிறது என்ற தலைக்கணத்தில் அவள் படிப்பில் நாட்டம் காட்டவில்லை. ஆனால் கமலா கல்விச்செல்வம் சிறந்தது என உணர்ந்து கல்வியை கடவுளாக பாவித்து படித்து பள்ளியிலே முதலிடம் பெற்றாள். மாலா எப்போதும் தனது பணக்கார அதிகாரத்தை காட்டும் தன்மை

உடையவள் கமலா மாலாவிடம் அன்பாக பேசினாலும் மாலா கமலாவை வெறுத்து ஒதுக்கினாள். காரணம் கமலா ஏழ்மையானவள் திடீரென ஒரு நாள் மாலாவின் தந்தையாரின் தொழிலில் நஸ்டம் காரணமாக மாலா தனது சந்தோஸத்தை எல்லாம் இழந்து இறுதியில் தெருவுக்கும் வந்து என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் நின்று கொண்டிருந்த வேளையில் தான் கமலா உதவினாள். கமலாவின் இந்த செயலே மாலாவின் வியப்புக்குக் காரணம் அதன் காரணமாகவே மாலா கமலாவின் கேள்விகளுக்கு விடை கூறாமல் தயங்கி நின்று கொண்டிருந்தாள்.

எனவே "சுட்டால் தான் நெருப்பு பட்டால் தான் பொறுப்பு" என்னும் பழமைக்கு ஏற்பவே நம்மிடம் எவ்வளவுதான் செல்வம் அளவுக்கு அதிகமாக இருந்தாலும்,

"கொடுத்தாலும் அழியாத செல்வம்!
யாராலும் பரிக்க இயலாத செல்வம்!
நிரந்திரமானச் செல்வம்! – அது
நமது கல்விச் செல்வமே!"

கல்வியை கற்று அதைப் பலருக்கு கற்பிப்போம்.

**ம.சௌந்தர்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பொது அறிவு

**International Day of the March**

**1 March:** Zero Discrimination Day

**3 March:** World Wildlife Day

**8 March:**
International Women's Day

**20 March:**
International Day of Happiness

**21 March:** International Day for the Elimination of Racial Discrimination

**21 March:** World Poetry Day

**21 March:**
International Day of Nowruz

**21 March**
World Down Syndrome Day

**21 March**
International Day of Forests

**22 March**
World Water Day

**23 March:**
World Meteorological Day

**24 March:**

World Tuberculosis Day

**24 March:**

International Day for the Right to the Truth concerning Gross Human Rights Violations and for the Dignity of Victims.

**25 March:**

International Day of Remembrance of the Victims of Slavery and the Transatlantic Slave Trade.

**25 March:**

International Day of Solidarity with Detained and Missing Staff Members.

## சின்னச்சின்ன கேள்விகள்

» உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?

ஏஞ்சல் (வெனிசுவேலா)

» ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூவின் பெயர் என்ன?

காக்டஸ்

» கண்ணே தெரியாத மீனின் பெயர் என்ன?

சன்.்.பிஷ்

» சீனாவின் தேசிய விலங்கு எது?

பாண்டா கரடி

» பூமியில் இருந்து பார்க்கும் போது ஒரு கோளின் மேற்பகுதி மட்டும் தெரியும் அது எந்த கோள்? வியாழன்

» பறக்கும் பலூனில் பறந்த முதல் இந்தியர் யார்?

இராமச்சந்திர சாட்டர்ஜி

» வரிக்குதிரைகளின் கண்களுக்கு எந்த நிறம் மட்டுமே தெரியும்?

கருப்பு

» முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூவின் பெயர் என்ன?

டைட்டன் ஆரம்

**ர.அபிதா**

கணினி அறிவியல் துறை முதலாமாண்டு

## பொது அறிவு

- பூனைக்கு கோவில் உள்ள நாடு எது?

  எகிப்து

- திருக்குறள் அச்சுக்கு வந்த ஆண்டு எது?

  1855

- ஆப்பிரிக்க யானையின் உயரம் என்ன?

  13அடி 2அங்குலம்

- தென்னை மரங்களின் வகைகள் எத்தனை?
  2600
- மகாராஸ்டிரா மாநிலத்தில் புகழ்பெற்ற சிற்றுண்டி எது?
  மிஸல்
- மகாத்மா காந்தி மும்பையில் நீண்ட காலம் தங்கி இருந்த இடம் எது?
  மணி பவன்
- கூர்க்கா இனத்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
  நேபாளம்
- கண் இல்லாத உயிரினம் எது?
  மண்புழு
- மானின் நாக்கில் எத்தனை சுவை அரும்புகள் உள்ளன?
  50000

**ச.மௌனிகா**
பி.சி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## விடுகதைகள்

» ஒரு பெட்டிக்குள் இரண்டு ரோஜாக்கள் அது என்ன?
நிலக்கடலை

» பற்கள் எதுவும் கிடையாது ஆனால் கடித்திடுவான் அவன் யார்?
செருப்பு

» கல்லின் உள்ளே ஒரு வில் அது என்ன?
தேள்

» சுற்றிலும் செடியே சூடேந்திரம் பூவே காயை உண்போம் கனியை உண்ண மாட்டோம் அது என்ன?
சுண்டைக்காய்

» ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய வீடு கல்லால் அடித்தால் கலைந்து போகும் அது என்ன?
தேன்கூடு

» ஆற்றை கடக்கும் அக்கரைக்குப் போகாது தண்ணீரில் கலக்காது தானும் நனையாது அது என்ன? அலை

» கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு ஓட்டுவீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை வெள்ளை மாணிகை உள்ளே குளம் அது என்ன?
தேங்காய்

» கருப்பு ரோட்டின்மேல் வெள்ளைக் கார் ஒன்று வட்டமடிக்கின்றது அது என்ன? தோசை

» அடித்தால் வலித்திடுவான் கடித்தால் இனித்திடுவான் அவன் யார்? கரும்பு

**ஜி.செந்தில்முருகன்**
கணினி அறிவியல் முதலாமாண்டு

## மருத்துவக் குறிப்பு

**காரட் மருத்துவ குணம்**

› உடல் பளபளப்பாகும்

› தாவரத் தங்கம் என்று அழைக்கப்படுகிறது.

› புற்று நோய் வராமல் தடுக்கிறது.

› காரட்டில் கரோட்டின் உள்ளது.

› இந்த பீட்டா கரோட்டின் நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும்.

› அல்சர் மற்றும் மற்ற சில வயிறு தொடர்பான நோய்களை குணப்படுத்துகிறது

› காரட் சாற்றினை அருந்தி வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும்

› நார்ச்சத்து காரட்டில் அதிகம் உள்ளது. எனவே இது நன்கு செரிமானத்தை தூண்டி நல்ல ஜீரண சக்தியை தருகின்றது.

› பச்சையாக உண்டு வந்தால் பற்களில் கரை நீங்கும்.

› பசியினை போக்கும்

**எஸ்.ரமேஸ்**

பி.சி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

---

**தாய்ப்பாலின் சிறப்பு**

• பிறந்த குழந்தைகளுக்குத் தரப்படும் தாய்ப்பாலுக்கு ஈடு இணையாக உணவு ஏதுமில்லை. நோய் எதிர்ப்பு பொருள்களும் இம்யூனோ குளோபுலின்களும் தாய்ப்பாலில் உள்ளன.

• வளரும் இளம் குழந்தைக்குத் தாய்ப்பால் வழியாக நோய் எதிர்ப்புப் பொருள்கள் ஊட்டப்படுகின்றன.

• செயற்கையான பால் உணவு மூலம் குழந்தைகளுக்கு எவ்வித நோய்க்கும் எதிரான தடுப்பு முறைகள் பெறமுடியாது.

• குழந்தைக்கு குறைந்தது 6 மாதமாவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

• செயற்கைப் பால் உணவு மூலம் வளரும் குழந்தைகள் மிகக் குறைவான நோய்க்கு ஆளாகின்றனர் என்பதை மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தி உள்ளன.

• தாய்ப்பால் வளரும் இளம் குழந்தைகளுக்கு எஸ்ஸெரிசிலா கோலி, சால்மொனெல்லா, ஷிஜில்லா, ஸ்ட்ரெப்டோ காக்கை, ஸ்டைபைலோ காக்கை போன்ற நிமோக்காக்கை பேக்ட்டிரியாவி லிருந்தும் போலியோ வைரஸ், ரோட்டோ வைரஸ்களிடமிருந்தும் பாதுகாப்பளிக்கலாம்.

**ப.கார்த்திக்**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நாட்டுப்புற மருத்துவம்

∴ வெந்தயத்தைத் தேங்காய் பாலில் ஊறவைத்து அரைத்து தலைக்குத் தேய்த்து வந்தால்
தலைமுடி உதிர்தல் குறையும்.

∴ தொட்டாசினுங்கி இலையை அரைத்து ஒரு குவளை தயிறுடன் கலந்து காலை
உணவிற்கு முன் பருகினால் வயிற்றுக்கடுப்பு குணமாகும்.

∴ மருதாணியை எலுமிச்சம் பழ சாறுடன் கலந்து பாதத்தின் மீது தடவினால் பாத எரிச்சல்
குணமாகும்.

∴ வெள்ளை எருக்கின் இலைகளை அரைத்து தினமும் காலை மாலை இரண்டு வேளையும்
பத்து போட கால் ஆணி மறையும்.

∴ அறுகம்புல் நறுக்கி நீர் விட்டு கொதிக்க வைத்து அந்த நீருடன் பால், சர்க்கரை கலந்து
குடித்து வர சிறுநீர்ப்பை சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

∴ மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வயிற்று வலி,
வாயுத்தொல்லை நீங்கும்.

∴ செம்பருத்திப்பூவை தண்ணீர் விட்டு சுண்ட காய்ச்சி தினமும் காலையில் குடிக்க இதயம்
வலிமை பெறும்.

∴ அன்னாசிப்பழத்தை எடுத்து தோல்களை சீவி சுத்தம் செய்து அடிக்கடி சாப்பிட்டு வந்தால்
கண் நோய்கள் குறையும்.

**பி.குருமூர்த்தி**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## நாட்டுப்புற மருத்துவம்

1.**ஈரல்வலி:**
ஆரஞ்சுப் பழம் தினமும் சாப்பிட்டு வர குணமாகும்.

**2.ஈரல் வியாதி :**
கரிசலாங்கண்ணி கீரை தொடர்ந்து சாப்பிட குணமாகும்.

3.**நுரையீரல் பலப்பட :**
தேனில் ஊறவைத்த நெல்லிக்காய் தினசரி ஒன்று சாப்பிட்டு வர நுரையீரல் இருதயம்
பலப்படும்

4.**நுரையீரல், சளி அடைப்பு தீர :**
இஞ்சி, வெள்ளெருக்கம் பூ, மிளகு சேர்த்து கஷாயம் சாப்பிட்டு வர தீரும்.

**5.நுரையீரல் புற்று நோய் வராமல் தடுக்க :**

முசுமுசுக்கை இலையை பொடியாக்கி மாதம் இரண்டு தடைவ சாப்பிடலாம்.

**ம.பிரீத்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## விடுகதை

» இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
தேள்

»கறுப்புச்சட்டைக்காரன் கழற்றினால் வெள்ளைக்காரன் அவன் யார்?
உழுந்து

» பூப்பூவா இருக்கும் ஆனால் தலையில் வைக்க முடியாது அது என்ன?
காலிபிளவர்

» ஆள் இல்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது அது என்ன?
துடுப்பு

» வினா இல்லாமலே ஒரு விடை அது என்ன?
பணிவிடை

» விரல் இல்லாமல் ஒரு கை அது என்ன கை?
உலக்கை

» வாயைத் திறந்தா வாயாட்; அழுகிறாள் அவள் யார்?
தண்ணீர்க்குழல்

» எட்டாக்கொம்பிலே மிட்டாய் பொட்டலம் அது என்ன?
தேன் கூடு

**வே.சிந்துஜா**
உயிர்த்தொழில் நுட்பவியல்
முதலாமாண்டு ‘அ’ பிரிவு

## பொன்மொழி

**கல்வி:**

» காந்தியடிகள்
கல்வி என்பது ஏட்டுப்படிப்பல்ல நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள உதவுவதே!

» **அரிஸ்டாடில்**
கல்வியின் வேர்கள் கசப்பானவை, ஆனால் அதில் காய்த்திடும் கனிகள் மிகவும் இனிப்பானவை

**நட்பு :**

» **ரூஹோ**
பொறுமை கசப்பானது அதன் விளைவு இனிப்பானது

» சிம்மக்குரல்
எதிரிகள் முதுகில் குத்துவார்கள் நண்பர்கள் மார்பில் குத்துவார்கள்

**ஆசிரியர்:**

» கார்லைஸ்
காலம் தான் சிறந்த ஆசிரியர்

» குரு நானக்
சிறந்த செயல்களே சிறந்த வழிபாடு.

**இலட்சியம் :**

» ஏ.பி.ஜே அப்துல்கலாம்

இலட்சியம் இல்லாத வாழ்க்கை காற்றில்லாத பலூன் போலவே இருக்கும்.

எதிர்காலத்திற்காக நாம் காத்திருக்கக்கூடாது எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும்

**» இலக்கு:**

உறக்கத்தில் காண்கின்ற கனவல்ல இது உறங்க விடாமல் செய்வது இந்த கனவு

**» தன்னம்பிக்கை:**

ஒவ்வொருமுறையும் விழுகின்றபோது எழுந்து நில்.

**ரா.நித்யானந்தன்**

பி.சி.ஏ முதலாமாண்டு

## விடுகதைகள்

•ஒற்றைக்காது உள்ளவனுக்கு ஒருபோதும் காது கேட்காது அது என்ன?

ஊசி

•கால் இல்லாத பந்தலை காணக்கான வினோதம் அது என்ன?

வானம்

•கையில் தவழும் பையில் உறங்கும் அது என்ன?

பணம்

•குடிக்கத் தண்ணீர் உண்டு குளிக்கத் தண்ணீர் இல்லை அது என்ன?

இளநீர்

•திறந்து திறந்து மூடினாலும் ஓசை சிறிதும் கேட்காது அது என்ன?

கண் இமைகள்

•எதையும் பேசும் எழும்பில்லாதவன் அவன் யார்?

நாக்கு

•புகையும் நெருப்பும் இல்லாமல் எரியும் அது என்ன?

நெஞ்சு எரிச்சல்

•உச்சியில் தோகை உள்ளங்காளில் ரோமம் உடலெல்லாம் வரிகள் அது என்ன?

கரும்பு

**பி.மகேந்திரபூபதி**

பி.சி.ஏ முதலாமாண்டு

## தத்துவ கணக்கு

∴ “ஆசைகள்

ஆயிரக்கணக்கில்...

இலட்சியங்கள்

இலட்சக்கணக்கில்...

முயற்சிகள் மட்டும்

முடியாத கணக்கில்...
முடியாதது எல்லாம்
பயிற்சி கணக்கில்...

∴ "வாழ்க்கை என்னும் தேர்வில்
வெற்றிபெற வேண்டுமானால்
தோல்விஎன்னும் நுழைவுத்தேர்வினை
எழுதித்தான் ஆக வேண்டும்"

∴ "இரு கை கூப்பி கடவுளை
வணங்குவதை விட
ஒரு கை நீட்டி பிறருக்கு நீ உதவி
செய் இரு கை உன்னை வணங்கும்
கடவுளாக!!!"

∴ "கோபத்தோடு இருக்கும்
ஒவ்வொரு நிமிடமும்
மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய
அறுபது வினாடிகளை இழக்கிறோம்"

∴ "உன்னைப்போல் ஒருவனைக்
காண்பது
முடியாத ஒன்று...! - இருந்தும்
நீ ஏன் வேறு ஒருவனைப்போல்
வாழ நினைக்கிறாய்...!

**இரா.அங்காளராணி**
கணிதவியல் இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## யானை – வேறுபெயர்கள்

வல்விலங்கு, வேழம்,
களிறு, பிழ, கரி,
கலபம், மாதங்கம்
கைமா, உம்பர்
வாரணம், அஞ்சனம்
அஞ்சனாவதி, அத்தி
அத்தினி, அரசுவா
அல்லியன், அனுபவம்
ஆம்பல், ஆனை
இபம், இரதி
குஞ்சரம், இருள், தூம்பு

**ஞானபிரகாஸ்**
இரண்டாமாண்டு உயிர்த்தொழில் நுட்பவியல் 'அ' பிரிவு

## அறிவியல் பெயர்

Automic fussion - அணுப்பிளவு
Satellite - துணைக்கோள்
Electron – நுண்ணோக்கி
Invention - புத்தமைப்பு
Spectrum of light– ஒளி நிற மாலை
Element - மூலகம்
Photo Synthesis - ஒளிச்சேர்க்கை
Telephone - பேசுங்கருவி
Microscope – நுண்ணோக்கி
Electromagnatic Induction – மின்காந்தத் தூண்டல்
Elements – தனிமங்கள்
Radiation – கதிரியக்கம்
Rocket – உந்து கருவி

**ந.கார்த்திகா**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## பொன்மொழிகள்

•பத்தாவது முறை விழுந்தவனை பார்த்து பூமி சொன்னது நீ ஏற்கனவே ஒன்பது முறை எழுந்தவன் என்று.

•நீரும் நெருப்பும் மோதிக்கொண்டால் நெருப்புக்குத்தான் நட்டம்.

•வாழ்க்கை வெங்காயம் போன்றது; உரித்துப் பார்ப்பவர் கண்ணீர் சிந்த வேண்டிவரும்.

•சோம்பேறிப் பையனையும் கதகதப்பான படுக்கையையும் பிரிப்பது கடினம்

**சி.மனோஜ்குமார்**

இயற்பியல் துறை அ-பிரிவு முதலாமாண்டு

## என் தமிழ் என்னைக்குத்திக்காட்டியது

தாத்தாவின் மூக்குக் கண்ணாடியை கை தவறிவிழுந்தபின் சொன்னேன் (Sorry) என்று…

தூங்கும்போது கழுத்துவரை போர்த்திவிடும் அம்மாவிற்கு தூக்கத்தில் சொல்வேன் (Thanks Ma) என்று..

நண்பனின் பிறந்த நாளைக்கு நான் அவனுக்கு சொல்வேன் (Happy Birthday) என்று…

நான் காலையில் நண்பர்களைப் பார்க்கும் போது அவனிடம் சொல்வேன் (Hai) என்று…

இரவில் வீட்டிற்கு செல்லும் வழியில் என் காலில் குத்தியது முள் ‘அம்மா’ என அலறினேன். குத்தியது முள்ளில்லை – என் தாய் தமிழ் தான் என்னைக் குத்திக்காட்டியது

**எஸ்.கே.சுகன்ராஜ்**

இயற்பியல் துறைமுதலாமாண்டு

## பொது அறிவு

•மீன் எண்ணெயில் குணமாகும் முக்கிய நோய் எது?
ரிக்கெட்ஸ்

•பாம்பின் விசப்பல்லின் பெயர் என்ன?
நீலி

•பறக்கும்போது உயரும் பறவை எது?
கழுகு

•பாம்புகளின் ஜென்ம விரோதி யார்?
காரிய தாசிப் பறவை

•வாய்க்குள் முட்டைகளை சுமக்கும் மீன் எது?
ஏரியில் என்ற பூனை மீன்

•பூனைக்கு கோவில் உள்ள நாடு எது?
எகிப்து

•தொடர்ச்சியாக எட்டுமாதங்கள் பறக்கும் பறவை எது?
டெர்ன்

**ஈ.ரம்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## உலகின் பண்டைய வரலாறு

1.சிந்துவெளி நாகரிகம் எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது?
5000ஆண்டுகள்

2.பழங்காலத்தில் இந்தியாவின் நுழைவாயிலாக இருந்தது எது?
கைபர்

3.இந்தியாவுக்கு வந்த முதல் சீன யாத்திரிகர் யார்?
பாஹியான்

4.புனிதப் பயணிகளின் இளவரசர் எனப்பட்டவர் யார்?
ஷாஜகான்

5.பிரெஞ்சுப்புரட்சியின் குழந்தை எனப்பட்டவர் யார்?
முதலாம் மாறவர்மன் குலசேகரன்

6.சோழப்பேரரசின் இறக்குமதி பொருள் எது?
விலை மதிப்பற்ற கற்கள்

**சீ.சாந்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## ஊர்பெயர்களும் விளக்கமும்

**திருநெல்வேலி**
வேத சர்மா என்ற பண்டிதர் தாம் காலை வேளையில் ஏழை மாணவர்களுக்கு மாணவர் குருவுக்கு காணிக்கையாக நெல்லைக் கொடுத்தனர்.

**பழனி**
பழனியம்பதி, வைக்காவூர், வராகமாலை

**திருப்பரங்குன்றம்**
திரு – பரன் - குன்று – மேலே சுல்தான் சிக்கந்தர் பாஷா என்ற பெயரில் இருந்தது.

**காவிரிப்பூம்பட்டினம்**
புத்தரின் பாலி மொழியில் கவீரபட்டிணம் என்ற பெயரில் இருந்தது.

**சிதம்பரம்**
சிற்றம்பலம், தில்லைவனம், பெரும்பற்ற புலியூர்

**வே.ராகவி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நகைச்சுவை

»வயிறு எரியுது டாக்டர்
எப்ப இருந்து
பல்பை முழுங்கினதுல இருந்து!

»ஏண்டா மெதுவா லெட்டர் எழுதுற?
எங்க அப்பாவுக்கு வேகமா படிக்க வராது அதுதான்..

»**கதிர்:** தேர்வு முடிவுகள் வந்ததும் உன்படம் தினத்தாளில் வரும் என்றாயே? முதல் மதிப்பெண் பெறுவாயா?
**தாமு:**இல்லை, இல்லை... என் படம் காணவில்லை கட்டத்தில் வருமே...

»**ஒருவன்:** உன்னை ஒரே உதையில் சென்னைக்கு அனுப்பிடுவேன்.
**மற்றவன்:** அப்படியா கொஞ்சம் மெதுவா உதை நான் திண்டிவனம் தான் போகனும்

**ச.மௌனிகா**
பி.சி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

# ஓவியம்





I BSc MATHS - 'B'



- இரா. காவியா

B.A Tamil - II


காமராஜர்
B. Devi
B.A. TAMIL (Ist year)


ART BY R.S
SUPPURAJ . R
I - B.SC (PHYSICS)
'B' SECTION
R.S

P. மகேந்திர பூபதி

BCA - B

I year

